## 54. உம் தழும்புகளால் குணமானேன்

**பல்லவி**

உம் தழும்புகளால் குணமானேன்
உம் காயங்களால் பெலனானேன்

**அனுபல்லவி**

*சிலுவையிலே எந்தன் பாவங்களை*
*உம் சரீரத்தில் ஏற்றுக்கொண்டீரே*

**சரணங்கள்**

1. எனக்காக அடிக்கப்பட்டீர்
எனக்காக நொருக்கப்பட்டீர்
பாவம் அறியா என் இயேசுவே
என் பாவம் ஏற்றதால் பாவியானீர்
- உம் தழும்புகளால்

2. உந்தன் இரத்தமே திருமருந்து
அதுவே என் வாழ்வின் அருமருந்து
உந்தன் இரத்தமே பாதுகாப்பு
அதுவே எந்தன் சுகவாழ்வு
- உம் தழும்புகளால்

3. உந்தன் இரத்ததினால் கழுவப்பட்டேன்
நீதிமானாக மாற்றப்பட்டேன்
ராஜாக்களாக ஆசாரியராய்
எங்களை தெரிந்து கொண்டவரே
- உம் தழும்புகளால்